Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JULY 11, 2024

வியாழக்கிழமை ஜூலை 11, 2024 | ஒளி: 10 கதிர்: 292 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## உயிரை பறித்த ரைஸ் குக்கர்

எம்.யூ.எம்.சனூன்



புத்தளம், மன்னார் வீதி, வேப்பமடு, விழுக்கை எனும் பகுதியில் வசித்து வந்த இரு பிள்ளைகளின் இளம் தாயான பாபு துஷ்யந்தி (வயது 28) மின்சார தாக்கி புதன்கிழமை (10) மரணமடைந்தார்.

தொடர்ச்சி P2



## சம்பளத்தை செலுத்த தவறின் குத்தகை இரத்து

வாழ்க்கைச் செலவு மற்றும் அண்மைக் காலத்தில் நாட்டில் தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி தோட்டத் தொழிலாளருக்கு நாளொன்றுக்கு செலுத்த வேண்டிய சம்பளத்தை மதிப்பீடு செய்யுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு 2024-05-22 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## "வீட்டுக்கு தீ வைத்தபோது பெறுமதியை உணர்ந்தேன்"

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தனது வீடு தீவைத்து அழிக்கப்பட்ட போது, ஒரு வீட்டின் பெறுமதியைக் கடுமையாக உணர்ந்ததாகவும் அதன் பெறுமதியை உணர்ந்ததாலேயே கொழும்பில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிக்கும் 2,50,000 பேருக்கு அந்த வீடுகளின் முழுமையான உரிமையையும் வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### பெருந்தோட்டத் துறையில்

## புதிய குடியிருப்பு கிராமங்கள்

பெருந்தோட்ட பிரதேசங்களில் தற்போதுள்ள வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு அரச நிறுவனங்களால் வழங்கப்படும் கிராமிய மட்ட சேவைகள் முறையாக கிடைக்காமையால், அவர்களை மரியாதையுடனும், கௌரவத்துடனும் நடாத்துவதற்காக பெருந்தோட்ட வீடுகளைக் குடியிருப்பு கிராமங்களாக மாற்ற வேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, பெருந்தோட்ட பிரதேசங்களில் தற்போது காணப்படும் தோட்ட வீடுகள் மற்றும் லயன் அறைகளை ஒன்றிணைத்து கிராமங்களாக மாற்றுவதற்கான புதிய சட்டத்தை அறிமுகம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கான சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, செவ்வாய்க்கிழமை (09) சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### அரசாங்கத்தின் சட்டத்திட்டங்களால்

# "பொருளாதார வீழ்ச்சி"



தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதாக அரசாங்கம் கூறினாலும், அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் சட்டத்திட்டங்களால் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சி நிலைக்கே கொண்டு செல்கின்றது என்று ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதாக அரசாங்கம் கூறினாலும், கொண்டுவரப்படும் சட்டதிட்டங்களைப் பார்க்கும் போது தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடையும் நிலைமையே உள்ளது.

ஜனாதிபதி கடந்த ஜூன் 28ஆம் திகதி வெளியிட்ட வர்த்தமானியில் பயறு, உளுந்து,குரக்கன், கவுப்பி போன்ற தானியங்களின் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. இதனை இங்கேயே உற்பத்தி செய்ய முடியும். ஏன் இறக்குமதி செய்ய வேண்டும்.

தொடர்ச்சி P2



### பாராளுமன்றம், ஜனாதிபதி

## பதவிக் காலத்தை திருத்த அங்கிகாரம்

அரசியல் யாப்பின் 30 (2), 62 (2) மற்றும் 83 (ஆ) ஆகிய உறுப்புரைகளில் ஜனாதிபதியின் பதவிக் காலம் மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் பற்றிய இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## களுத்துறையில் இருந்து ஜனாதிபதி வேட்பாளர்



திருடர்களுடன் பணிக்கும் தலைவர்களை விரட்டியடித்து, திருடர்களை சிறையிலடைக்கக் கூடிய ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களுத்துறை மாவட்டத்தில் இருந்து களமிறக்குவோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சஜித்துடன் டளஸ் சங்கமம்



பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான நிதஹாஸ ஜனதா சபாவ (NJS), ஐக்கிய மக்கள் சக்தியுடன் (SJB) கூட்டணி அமைக்கும் முடிவை அறிவித்துள்ளது.

இதனை, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் உறுதிப்படுத்தினார்.

## "மொட்டுடன் எப்படி வந்தாலும் தோல்வி"



மொட்டுடன் சேர்ந்து வந்தாலும் பிரிந்து வந்தாலும் தோல்வியே, ஆரம்பத்தில் கட்சிகளை மஹிந்தவே பிளவுபடுத்தினார். இப்போது அவரின் கட்சியே பிளவடைந்துவிட்டது. இவர்களை எப்படியும் மக்கள் தோற்கடிப்பர் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




### 45 புகையிரத நிலையங்களில்

## இராணுவம் களமிறக்கம்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில் நிலைய அதிபர்கள் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தால் ரயில் பயணிகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் பெரிதும் சிரமப்பட்டனர். சேவையை முறையாக முன்னெடுத்துச் செல்ல 45 புகையிரத நிலையங்களுக்கு இராணுவம் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவிடம் பாதுகாப்பு அமைச்சு விடுத்த கோரிக்கைக்கு அமைய, புகையிரத நிலையங்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பொலிஸாருக்கு உதவ இராணுவ வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

இந்நிலையில், புதன்கிழமை (10) நண்பகல் 12 மணிக்கு முன்னர் அனைத்து ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் புகையிரத கட்டுப்பாட்டாளர்கள் உரிய புகையிரத நிலையத்திற்கோ அல்லது அருகில் உள்ள புகையிரத நிலையத்திற்கோ தகவல் தெரிவிக்குமாறு ரயில்வே பொது முகாமையாளர் எஸ்.எஸ்.முதலிகே அறிவுறுத்தியிருந்தார்.

கட்டளைக்கு இணங்காத அனைத்து நிலைய அதிபர்கள் மற்றும் ரயில் கட்டுப்பாட்டாளர்கள் சேவையை விட்டு வெளியேறியதாக கருதப்படும் என்று அனைத்து நிலைய அதிபர்கள் மற்றும் ரயில் கட்டுப்பாட்டாளர்களுக்கு இறுதி அறிவித்தல் விடுக்கப்படுவதாக முதலிகே கூறியிருந்தார்.

தொடர்ச்சி P2



### தொழிலாளர்களின் சம்பள விடயத்தில்

## "கம்பனிகள் மாறாவிடின் நாங்கள் மாற்றுவோம்"

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் பெருந்தோட்டக் கம்பனிகள் மாறாவிட்டால் நாங்கள் மாற்றுவோம் என்பதுடன், அந்த மக்களின் வாழ்வாதாரத்தில் மாற்றங்கள் ஏற்படாவிட்டால் அதில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்போம் எனவும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

## மீண்டும் நான் எம்.பியானது சிக்கலா?



தான் பாராளுமன்ற உறுப்பினராக மீண்டும் நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் எவருக்கும் உயர்நீதிமன்றத்திற்குச் செல்லலாம். அதனைவிடுத்து தேர்தல்கள் ஆணைக்குழுவை விமர்சிப்பதில் அர்த்தமில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹுமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### தோட்டப் பாடசாலைகளில்

## அறுபது 'ஸ்மார்ட்' வகுப்பறைகள்



இந்திய அரசின் நிதியுதவியுடனும், இலங்கை அரசின் ஒத்துழைப்புடனும் நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட தோட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களுக்கான 60 "ஸ்மார்ட்" வகுப்பறைகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம் நடைமுறைப்படுத்த உள்ளது.

இந்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக 2023.12.18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த கருத்திட்டத்தை உயர்தர மாணவர்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு அமுல்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, குறித்த மட்டுப்பாட்டை நீக்குவதற்கு இந்திய உயர்ஸ்தானிகராலயம், கல்வி அமைச்சு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



## சம்பளத்தை செலுத்த தவறின் குத்தகை இரத்து

அத்துடன், மேற்குறித்த சம்பளத்தைச் செலுத்துவதற்கு ஒவ்வொரு பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளிடமுள்ள இயலுமையைத் தீர்மானிப்பதற்காகக் குழுவொன்றை நியமிப்பதற்காகவும் குறித்த அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த குழுவின் விதந்துரைக்கமைய இயலுமை இருப்பினும், தமது தோட்டத் தொழிலாளர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட சம்பளத்தைச் செலுத்தாத பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுடன் அரசு செய்துள்ள காணிக் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்குத் தேவையான சட்டத்தை வகுப்பதற்கான செய்முறையைத் துரிதப்படுத்துவதென, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இராணுவம் களமிறக்கம்

இதேவேளை, தங்களால் முன்னெடுக்கப்படும் வேலைநிறுத்த போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகச் சங்கங்கள் தெரிவித்துள்ளன. பல கோரிக்கைகளை முன்வைத்து, நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் செவ்வாய்க்கிழமை (9) நள்ளிரவு முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

## "கம்பனிகள் மாறாவிடின் நாங்கள் மாற்றுவோம்"

மலையக மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகி, பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு ஊழைப்புக்கேற்ற ஊதியமின்றி தவித்துக்கொண்டிருக்கின்றனர். இந்த மக்களின் சம்பள உயர்வு சட்டப்பூர்வமாக வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட போதும், அதனை எதிர்க்கும் சக்தி தனியார்த் துறையான தோட்ட கம்பனிகளுக்கு இருப்பது ஆச்சரியப்படச் செய்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை முதுகெலும்பாகச் சுமந்துகொண்டிருக்கும் மலையக மக்களின் சம்பள உயர்வுக்கு எதிராக நீதிமன்றம் செல்கின்றார்கள் என்றால் தோட்டக் கம்பனிகள் நிருவாகங்கள் எவ்வாறான கேவலம் கெட்ட நிலையில் இருக்கின்றது என்பதனை புரிந்துகொள்ள முடிகின்றது.

'பெருந்தோட்டக் கம்பனி உரிமையாளர்களே நீங்கள் மாறுங்கள் இல்லாவிட்டால் நாங்கள் உங்களை மாற்றுவோம்". இதேவேளை உடனடியாக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரம் சம்பந்தமான விடயங்களை மாற்றுங்கள் இல்லாவிட்டால் நாங்கள் மாற்ற வைப்போம் என்பதனை அரசாங்கத்திற்கும் கூறிக்கொள்கின்றோம் என்றார்.

குறிப்பு: பூனாகலை - பண்டாரவளை பிரதான வீதியிலிருந்து அம்பிட்டிகந்த வீதி புனரமைப்பு பணிகளுக்குத் திங்கட்கிழமை (08) அன்று அடிக்கல் நாட்டப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம்.



## அறுபது 'ஸ்மார்ட்' வகுப்பறைகளை

அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் திருத்தம் செய்து கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக நீர்ப்பாசனம் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் சமர்ப்பித்த தகவல்களை அமைச்சரவை கருத்தில் கொண்டுள்ளது.



## "வீட்டுக்கு தீ வைத்தபோது...

கொழும்பிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழ்கின்ற, இரண்டரை இலட்சத்துக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அந்த வீடுகளின் பூரண உரிமையை வழங்கும் வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக 50,000 வீடுகளை வழங்கும் "ரன்தொர உறுமய" வீட்டு உரிமை வழங்கும் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் 31 அடுக்குமாடிக் குடியிருப்புகளில் அமைந்துள்ள 130 வீடுகளுக்கான உரிமைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், இதன்போது அடையாளமாக ஜனாதிபதி சிலருக்கு வீட்டு உரிமைகளைக் கையளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவின்படி, 2024 வரவு-செலவுத் திட்டத்தில் 20 இலட்சம் மக்களுக்கு இலவச காணி உரிமை வழங்கும் உறுமய வேலைத்திட்டம் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிக்கும் இரண்டரை இலட்சத்துக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அந்த வீடுகளின் முழு உரிமையை வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் குறைந்த வருமானம் பெறுவோருக்கு மாதாந்தம் 3,000 ரூபா அல்லது அதற்கும் குறைவான வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் உட்பட அனைத்து வீடுகளுக்காகவும் 150,000 ரூபாவினை செலுத்தி முடித்திருப்போர் மற்றும் இதுவரையில் அந்த தொகையினை செலுத்தாமல் இருந்து ஒரு மாதத்திற்குள் அந்தத் தொகையைச் செலுத்தி முடிப்போர் உள்ளடங்களாக 50,000 பயனாளி குடும்பங்களுக்கு முதல் கட்டத்தின் கீழ் முழுமையான வீட்டு உரிமை வழங்கப்படும்.

"உறுமய திட்டத்தின் மூலம் 20 இலட்சம் பேருக்கு இலவச காணி உரிமையும், 50,000 பேருக்கு வீடுகளுக்கான முழு உரிமையும் கிடைக்கும். காணியும் வீட்டு உரிமையும் கிடைப்பதென்பது இந்த நாட்டு மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, மக்களுக்கு இயன்றளவு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

## "பொருளாதார வீழ்ச்சி"

இறக்குமதிச் செய்தால் இங்குள்ள விவசாயிகளே நிர்க்கதியாகும் நிலை ஏற்படும். எமது நாட்டின் விவசாயத்துறை மேலும் வீழ்ச்சிக்குள் செல்லும் என்றார்.

இதேவேளை, வாகன இறக்குமதி தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

15 பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவில் பல்வேறு தரப்பினர் உள்ளனர். அதனூடாக வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவது சிறந்தது. ஆனால் அமைச்சரவையில் தீர்மானங்கள் சில எடுக்கப்பட்டுள்ளன. அந்த தீர்மானங்களில் முதலீட்டுச் சபையின் ஊடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படுகின்றது.

துண்டுகளாகக் கழற்றி வாகனங்கள் வந்து இங்கு அவற்றைப் பொருத்தி வாகனங்கள் இங்கே ஓடும். அதற்காக 70 வீதம் வரையில் தீர்வை வரிச் சலுகை வழங்கப்படுகின்றது. பெறுமதி சேர்வை இன்றி அமைச்சரவை அனுமதியுடன் இவ்வாறாக வாகன இறக்குமதிக்கு ஒரு நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. வாகனங்களின் விலைகளை அந்த நிறுவனமே தீர்மானிக்கும். இதில் பாரதூரமான தவறுகள் உள்ளன என்றார்.



## மீண்டும் நான் எம்.பியானது சிக்கலா?

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) நடைபெற்ற விவாதத்தின் போது, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான முஜிபூர் ரஹுமான் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எம்.பியான மகிந்தானந்த அளுத்கமகே விமர்சனம் செய்திருந்தார்.

அது தொடர்பில் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பி கருத்து வெளியிடுகையிலேயே முஜிபூர் ரஹுமான் இவ்வாறு கூறினார்.

உள்ளூராட்சி சபைக்கான தேர்தலைச் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவினாலேயே அறிவித்தது. அந்த தேர்தலில் போட்டியிடுவதற்காகவே நான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினேன். ஆனால், ஜனாதிபதியும் அரசாங்கமும் உள்ளூராட்சி தேர்தலை நடத்தப் பணம் கொடுக்காது தேர்தலை ஒத்தி வைக்க நடவடிக்கை எடுத்தது.

நான் ஒன்றரை வருடம் காத்திருந்தேன். ஆனால் போட்டிக்கு இவர்கள் வரவில்லை. முடியாத நிலையில் மீண்டும் பாராளுமன்றத்திற்கு வந்தேன். எனது நியமனத்தில் தவறு இருந்தால் உயர்நீதிமன்றத்திற்குச் செல்ல முடியும். தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நான் நியமிக்கப்பட்டுள்ளேன். உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாத நிலையிலேயே நான் மீண்டும் பாராளுமன்றத்திற்கு வரவேண்டியேற்பட்டது என்றார்.

## உயிரை பறித்த ரைஸ் குக்கர்

புதிதாக வாங்கிய ரைஸ் குக்கரில் செவ்வாய்க்கிழமை (09) இரவு சோறு சமைக்க முயற்சித்த போது மின்சாரம் தாக்கு உள்ளானார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர் மரணமடைந்தார். விசாரணைகளின் பின்னர், அவருடைய சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## பதவிக்காலத்தை திருத்த அங்கிகாரம்

அது தொடர்பான சந்தேகத்தைத் தவிர்த்தல் மற்றும் ஏதாவது இணக்கமின்னையை நீக்குவதற்கு "ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட" எனும் சொல்லுக்கு மாற்றாக "ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட" எனும் சொல்லைப் பதிலீடு செய்வதன் மூலம் அரசியலமைப்பின் 83 (ஆ) உறுப்புரையை திருத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில், அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை தயாரிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## களுத்துறையில் இருந்து ஜனாதிபதி வேட்பாளர்

இவர், ஐக்கிய மக்கள் சக்தியில் சுயாதீனமாகச் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இன்னும் சில மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதன்போது எந்தவொரு திருட்டும் இல்லாத ஒருவரை நியமிக்க வேண்டும் என்று மக்கள் எதிர்ப்பாகின்றனர். இதனாலேயே போராட்டமும் நடந்தது. இந்நிலையில் எனது கட்சி வேண்டாமென்று கூறிய போதும் நான் ரணில் விக்ரமசிங்கவுக்காக வாக்களித்தேன்.

அவர் தகுதியானவர் என்பதனாலேயே நான் வாக்களித்தேன். அவர் தனது பணியில் வரிசை யுகம் இன்றி முன்னெடுத்துச் சென்றுள்ளார். ஆனால் பொருளாதாரம் தொடர்பில் எனக்குத் தெரியாது. இந்த நேரத்தில் நீங்கள் சரியாகத் தீர்மானம் எடுத்துச் செயற்படுங்கள். தவறானவர்களை அருகில் வைத்திருந்தால் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். எல்லோரும் சுத்தமானவர்கள் என்று கூற முடியாது. நாங்கள் எல்லோரும் திருடர்களே. நானும் செய்துள்ளேன்.

இந்நிலையில், மஹிந்த ராஜபக்ஷ எப்போதும் மனதில் இருக்கும் ஒருவர். அவர் யுத்தத்தை முடித்து நாட்டுக்கு பெரும் சேவையைச் செய்துள்ளார். இந்நிலையில் ராஜபக்ஷக்கள் மூவரே நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்ததாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கோதாபய ராஜபக்ஷவை நியமிக்கும் போதே வேண்டாம் என்று கூறினேன். கடைசியில் அவர் நாட்டை விட்டு ஓடும் நிலைமை உருவானது.

இதேவேளை, அண்மையில் களுத்துறையில் நடந்த கூட்டத்தில் மேடையில் வரிசையில் இருந்தவர்கள் தொடர்பில் விமர்சனங்கள் உள்ளன. இவர்களா? நாட்டை காக்கப் போகின்றனர். திருடர்களே அந்த வரிசையிலிருந்தனர்.

இந்த நாட்டை ஆட்சி செய்ய வேண்டுமென்றால் திருடர்களை தங்களிடம் வைத்துக்கொள்ள வேண்டாம். அப்போதே சிறப்பாக நாட்டை ஆட்சி செய்ய முடியும். திருடர்களைப் பிடிக்காது. அவர்களுடன் வேலைசெய்தால் எப்படி திருட்டை ஒழிக்க முடியும் என்றார்.

## "மொட்டுடன் எப்படி வந்தாலும் தோல்வி"

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சர்வதேச தொடர்புகள் உள்ளவர் என்றே கூறுகின்றனர். ஆனால் கடந்த 2 வருடங்களில் ஒரு ரூபாவேனும் நேரடி முதலீடாக இந்த நாட்டுக்கு வரவில்லை. ஏற்றுமதி வர்த்தகத்தை அதிகரிக்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கவில்லை. இதன்மூலம் டொலர் வருவாயை அதிகரித்து நீண்ட கால இலக்கை நோக்கிச் செல்ல இந்த அரசாங்கம் தவறியுள்ளது என்றார்.

புதிய வர்த்தக சந்தைக்குள் நுழைந்து டொலர்களை பெற்றுக்கொள்ளும் முறைமைகளை இந்த அரசாங்கம் அறிமுகப்படுத்தப்படவில்லை. வங்குரோத்து நாடாகக் கடன் மறுசீரமைப்பு முடிந்த பின்னர் கடனை செலுத்த வேண்டும். ஆனால் அதற்கான டொலரை தேடும் முறைமையை தயாரிக்கவில்லை. கடனை செலுத்த ஆரம்பிக்கும் போது பில்லியன் டொலர் வரையில் வட்டியாகச் செலுத்த வேண்டியேற்படும்.

இதேவேளை, ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலைநிறுத்தங்களை நாங்கள் அனுமதிக்காவிட்டாலும் அவர்களின் உரிமைகளுக்காகக் குரலெழுப்பும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். இந்நிலையில் அது தொடர்பில் அச்சுறுத்தல் விடுத்து சம்பளத்தை அதிகரித்தால் 21 சதவீதம் வரையில் 'வற்' வரியை அதிகரிக்க நேரிடும் என்று நிதி அமைச்சின் செயலாளர் கூறுகின்றார். இப்படிக் கூறும் போது அடுத்த வீட்டில் இருக்கும் அரச ஊழியர் தொடர்பில் அடுத்த வீட்டுக்காரர் கோபமடையும் நிலைமையே ஏற்படும் என்றார்.

# தூய. ஆரோக்கிய அன்னை ஆலய திருவிழா

■ எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார்-நானாட்டான் தூய. ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா திருப்பலியானது புதன்கிழமை (10) காலை 7 மணிக்கு அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளார் தலைமையில் திருவிழா திருப்பலி கூட்டு திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருநாள் திருப்பலியில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் உள்ளடங்களாக ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசி பெற்றனர்.

நானாட்டான் பங்குத்தந்தை அருட்தந்தை பெனோ அடிகளாரின் ஒழுங்கு படுத்தலில் ஏழு நாள் ஆயத்த வழிபாடுகளுடன் இத் திருநாள் திருப்பலி வெகு விமர்சையாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.










அதிபர், ஆசிரியர் சம்பள பிரச்சினை;

# ஓரிரு தினங்களில் சரி செய்ய முடியாது

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு நீண்ட கால பிரச்சினை. அதனை ஓரிரு தினங்களில் சரி செய்ய முடியாது. ஆசிரியர் சேவையில் ஆசிரியர் ஒருவர் தரம் ஒன்றுக்கு வரும்போது, அதிபர் ஒருவர் தரம் 3 சேவையை ஆரம்பிக்கும்போது அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் இதனையும்விட குறைவு. இந்த இரண்டுக்கும் தீர்வு காண்பதாக இருந்தால், அதிபர்களை அதிகாரிகள் சேவைக்கு இணைத்துக்கொள்ள வேண்டும். அதன்போது அவர்களுக்கு அதில் கிடைக்கும் கொடுப்பனவுகள் மூலம் ஆசிரியர் சேவையை விட சம்பள அதிகரிப்பு கிடைக்கும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்று பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், அதிபர்களின் ஒட்டுமொத்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்காக ஓய்வு பெற்ற பேராசிரியர் குணபால நாணயக்கார தலைமையிலான குழு அமைத்து, அதில் அனைவருக்கும் கருத்து தெரிவிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டு, அந்த குழு அறிக்கை ஒன்றைத் தயாரித்திருந்தது. என்றாலும் அதிபர்களின் சம்பள சம்பள முரண்பாட்டுக்குக் காரணமாக இருப்பது ஆசிரியர் சேவையில் இருக்கும் முரண்பாடாகும்.

ஆசிரியர் சேவையில் ஆசிரியர் ஒருவர் தரம் ஒன்றுக்கு வரும்போது, அதிபர் ஒருவர் ஆசிரியர் சேவையில் இருந்து தரம் 3 சேவையை ஆரம்பிக்கும்போது அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் இதனையும்விட குறைவு. இந்த முரண்பாடு ஆரம்பத்தில் இருந்து வரும் பிரச்சினை . அதனால் இந்த இரண்டுக்கும் தீர்வு காண்பதாக இருந்தால், அதிபர்களை அதிகாரிகள் சேவைக்கு இணைத்துக்கொள்ள வேண்டும். இதன்போது அவர்களுக்கு அதில் கிடைக்கும் கொடுப்பனவுகள் மூலம் ஆசிரியர் சேவையை விடச் சம்பள அதிகரிப்பு கிடைக்கிறது.

அவ்வாறு இல்லாமல் அதிபர்களுக்குச் சம்பள அதிகரிப்பு மேற்கொண்டால், அதனைத் தொடர்ந்து ஆசிரியர் சேவை சங்கம் அதனை தங்களுக்கும் வழங்குமாறு கோருவார்கள். அவர்களுக்கு வழங்கும்போது, அதற்கு அடுத்தபடியாக இருக்கும் ஆசிரியர் கல்விச் சேவை, ஆசிரியர் ஆலோசகர் சேவை என தொடர்ந்து இந்த முரண்பாடு சுற்றிக்கொண்டு இருக்கும். அதனால் இந்த பிரச்சினை தொடர்பாக அனைத்து தரப்பினரும் ஒரு இடத்தில் அமர்ந்து, அனைத்து துறையினருக்கும் ஒரே தடவையில் தீர்வுகாணும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் இந்த பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வுகாண முடியாது.

எனவே, அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாடு நீண்ட கால பிரச்சினை. அதனை ஓரிரு தினங்களில் சரி செய்ய முடியாது. அனைத்து தரங்களின் முரண்பாடுகளையும் ஒரே தடவையில் தீர்க்கவேண்டி இருக்கிறது. இது தொடர்பாக அமைச்சரவைக்குப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தேன். அதற்கு, அதிபர்களுக்குத் தொடர்பாடல் கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு வழங்குவதற்கு திறைசேரியுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதற்கு அனுமதி கிடைத்திருக்கிறது.

அது தொடர்பில் எமது அமைச்சின் செயலாளரும் திறைசேரியும் கலந்துரையாடித் தீர்வுகாணப்படவுள்ளது. என்றாலும் இந்த நடவடிக்கை தற்போது இறுதிக் கட்டத்தில் இருக்கிறது. அதிபர்களுக்குக் கொடுப்பனவு வழங்கும் பிரேரணையையும் நாங்கள் முன்வைத்திருக்கிறோம் என்றார்.



# "போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தில் திருத்தம்"

ஆட்டோக்கள் மக்களுக்கு பெரும் சேவையை வழங்குகின்றன. எனினும், அந்த சேவையை ஒழுங்குபடுத்தல் அவசியம். அது தொடர்பில் போதிய அதிகாரம் இல்லாமையினால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(10) வாய் மூல விடைக்கான வினா நேரத்தில் வசந்த யாப்பா பண்டார எம்.பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், ஆட்டோக்கள் மக்களுக்கு பெரும் சேவையை வழங்குகின்றன. எனினும் அந்த சேவையை ஒழுங்குபடுத்தல் அவசியமாகிறது. அது தொடர்பில் போதிய அதிகாரம் இல்லாமையினால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

தற்போதுள்ள நிலையை மாற்றுவதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து அது மீள கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்த வகையில் தற்போது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு பேருந்து கட்டணங்கள் தொடர்பில் மட்டுமே தலையிட முடியும். பாடசாலை வான்கள், ஆட்டோக்கள் உள்ளிட்ட வாகனங்களுக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஒழுங்குபடுத்தலை மேற்கொள்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு சட்ட மூலமாக்கி சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அதனை அனுப்பி மீள பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் விரைவில் அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றார்.

# அதிபர்களின் பிரச்சினைகள் பாராளுமன்றத்தில்...



பாராளுமன்றத்திற்கு அருகில் உள்ள பொல்துவ சந்தியில் அமைதியான முறையில் அதிபர்கள் இணைந்து புதன்கிழமை(10) முன்னெடுத்து வந்த ஆர்ப்பாட்டத்தின் போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறித்த இடத்திற்கு விஜயம் செய்து அவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார். இந்த பிரச்சினைகள் குறித்து இன்று பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிப்பேன் என்று இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வாக்குறுதியளித்தார். இதன் பிரகாரம், இன்று பாராளுமன்றம் கூடிய போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறித்த பிரச்சினைகளை சபையில் முன்வைத்தார்.

இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தற்போது, பொல்துவ சந்தியில் அதிபர்களால் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. எமது நாட்டில் 12,000-13,000 அதிபர்கள் உள்ளனர். இவர்களது சம்பள முரண்பாடுகள், பிரதான கொடுப்பனவுகள், தொடர்பாடல் கொடுப்பனவுகள் மற்றும் பயண கொடுப்பனவுகள் தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்தே இந்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இலங்கை அதிபர் சேவையின் தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவி உயர்வு பெறும் போது அவர்களின் சம்பளம் ரூ.3,000 முதல் 6,000 வரை வெட்டப்படுகிறது. அதிபர் சேவையை நிறைவேற்றுத் தர சேவையாகக் கருதப்பட்டாலும், அவர்களுக்கு எந்த சேவை வசதிகளும் கிடைப்பதில்லை. எந்த கொடுப்பனவுகளையும் அவர்கள் பெறுவதுமில்லை. தற்போது இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அது உபகுழுவில் முடங்கிப்போயுள்ளது. எனவே குறித்த அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்து அரசாங்கம் கூடிய விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதிபர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் எமது நாட்டின் கல்வி முறை வீழ்ச்சியடையும். இவ்விடயத்தில் கல்வி அமைச்சர் தலையிட்டு அவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன். தங்களின் அடிப்படைச் சம்பளம் வெட்டப்பட்டால், இங்கு முறைமையில் பிழை காணப்படுகிறது. எனவே இந்தப் பிரச்சினைகளை முறையாக ஆராய்ந்து தீர்வுகளை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கிறேன் என தெரிவித்தார்.

# மாணவி வன்புணர்வு; காதலனும் தாயாரும் கைது

ஏறாவூர் பிரதேசத்தில் 14 வயது மாணவியைக் காதலித்த 22 இளைஞன் அவரை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியுள்ள சம்பவம் தொடர்பில், குறித்த இளைஞனும் அவரது தாயாரும் புதன்கிழமை (10) கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவியின் தந்தையார் இல்லாத நிலையில், தாயார் மத்திய கிழக்கு நாடொன்றில் பணிபுரிந்து வருவதுடன், மாணவி உறவினருடன் தங்கி அப்பகுதியிலுள்ள பாடசாலையில் கல்வி கற்று வந்துள்ளார்.

இந்த நிலையில், அதே பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவருடன் காதல் ஏற்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் குறித்த மாணவியை இளைஞன் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்குத் தங்க வைத்து பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி வந்துள்ளார். இது தொடர்பாகப் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சிறுமியை அடைத்து வைத்து பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியுள்ள குற்றச்சாட்டில் இளைஞனையும், அதற்கு உடந்தையாக இருந்த அவரது தாயையும் புதன்கிழமை (10) அன்று கைது செய்ததுடன், சிறுமியை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.



# வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளான பேருந்து

■ ஏ.எச்.ஹஸ்பர்

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த அதிசொகுசு தனியார் பேருந்து ஒன்று, கண்டி - திருகோணமலை பிரதான வீதியின் 96ஆம் கட்டை முள்ளிப்பொத்தானை பகுதியில் புதன்கிழமை (10) அதிகாலை வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் சாரதி, நடத்துநர் உட்பட பயணிகள் சிலரும் காயமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்துக்குக் காரணம் என ஆரம்பக் கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மலேசியாவிடம் செந்தில் கோரிக்கை

மலேசியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மலேசியா உயர் கல்வி அமைச்சர் ஷாம்ப்ரி அப்துல் காதிரை சந்தித்து இலங்கைக்கும் மலேசியாவுக்குமான கூட்டுத்திட்டம் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

மலேசியாவில் உயர்கல்வி கற்கும் 3,800ற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள், ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் இலங்கைக்குத் திரும்பி விசாவைப் புதுப்பிக்கும் நிலை காணப்படுகிறது. ஆதலால் அவர்களின் பட்டப்படிப்பை நிறைவு செய்யும் காலமான 4 வருடங்களுக்கு விசா காலத்தை அதிகரித்துத் தருமாறு மலேசியா உயர் கல்வி அமைச்சர் ஷாம்ப்ரி அப்துல் காதிரிடம் ஆளுநர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆளுநரின் வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சர் அதற்கான நடவடிக்கை யை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையிலிருந்து



மலேசியாவிற்கு செல்லும் மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு மலாய் மொழிக்கான பயிற்சியை இலங்கையில் ஆரம்பிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், மலேசியாவிற்கும் இலங்கைக்குமான கல்வி தொடர்பான கூட்டு பரிமாற்ற திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ சரவணன் முருகன் மற்றும் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் சுமங்கல டயஸ் ஆகியோர் கலந்துக்கொண்டுள்ளனர்.

# ஒரு வசந்த காலத்தில் மலர்ந்த மலர்களில் மக்கள் வாழவில்லை

சமீப காலமாகப் பாராளுமன்றத்தை நடத்துவதற்கான தினசரி செலவு அவ்வப்போது சர்ச்சைக்குரிய விடயமாக மாறி வருகிறது. பாராளுமன்றத்தின் கடந்த 2ஆம் திகதியன்று இடம்பெற்ற அவசர கூட்டத்தை ஒன்றரை மணி நேரம் நடத்துவதற்குக் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகச் சமீபத்தில் தகவல் வெளியானது. கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் விசேட அறிக்கையொன்றை விடுக்கும் வகையில் இந்த அவசர கூட்டம் இடம்பெற்றது. ஜனாதிபதியின் உரையின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவரும் கருத்து வெளியிட்டதையடுத்து, பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

ஒன்றரை மணி நேரம் என்ற குறுகிய காலத்துக்கு, பாராளுமன்ற செயல்பாட்டிற்கு, கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவாகும் என்றால், யாரும் நம்ப மாட்டார்கள். ஆனால், பாராளுமன்றம் ஒரு நாள் முழுவதும் செலவழிக்கும் அதேதொகையை ஒன்றரை மணி நேரம் என்ற குறுகிய காலத்திற்குக் கூட செலவழிக்க வேண்டும் என்பதுதான் யதார்த்தம்.

ஜனாதிபதி, பாராளுமன்றத்தில் உரையாற்றி விசேட அறிக்கையொன்றை வெளியிட விரும்பினால் அதற்கான சகல தேவைகளையும் நிறைவேற்றுவது சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் உட்பட பாராளுமன்றத்தின் முழு ஊழியர்களினதும் பொறுப்பாகும். ஆனால் அதேசமயம் பாராளுமன்றத்தை திறந்து வைக்கும் காலத்தை அதிகபட்சமாகப் பயன்படுத்திக் கொள்வது அவசியம்.

விசேட அறிக்கையை விடுவதற்காக, இப்படி பாராளுமன்றத்தைத் திறப்பதால் பொதுமக்களுக்கு எந்த பயனும் இல்லை. குறைந்த பட்சம் அந்த உரையின் மீது விவாதம் நடத்த ஏற்பாடு செய்திருந்தால், அந்த நேரத்தைத் திறம்படப் பயன்படுத்தியிருக்கலாம். முதலில் இவ்வாறான விவாதம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்ட போதிலும், அது நடைபெறவில்லை. அப்படியானால், இந்த அவசர கூட்டத்தை அடுத்த பாராளுமன்ற நாளில் பயன்படுத்தியிருக்கலாம் என நம்புகிறோம். இது அதிகபட்ச நேரத்தைப் பயன்படுத்துவதோடு, பொதுமக்களின் வரிப்பணம் விரயமாவதையும் தடுக்கும்.

பாராளுமன்றத்தில் செலவழிக்கும் நேரத்தையும் பணத்தையும் முறையாகப் பயன்படுத்த வேண்டியது பொறுப்பான அனைவரின் பொறுப்பாகும், இது பொதுமக்களால் பராமரிக்கப்பட வேண்டும். இந்நாட்டு மக்கள் "ஒரு வசந்த காலத்தில் மலர்ந்த மலர்களில்" வாழவில்லை என்பதை அனைத்து அதிகாரிகளும் மனதில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கைச் சுமையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், பாராளுமன்றத்தின் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தாததைக் காணும்போது, அவர்களின் விரக்தி மேலும் அதிகரிக்கும். இந்த விரக்தி கொதித்து போராட்ட வடிவில் வெடித்த போது, பாராளுமன்றம் மிகவும் நெருக்கடியான இடமாக இருந்தது என்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

இக்கட்டான நேரத்தில் பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் மூலம் நாட்டுக்குச் சிறந்த முன்னுதாரணமாக விளங்குவது அவசியமாகும். அவசர கூட்டத்துக்காகப் பாராளுமன்றத்தை ஒன்றரை மணி நேரம் திறந்து வைப்பது போன்ற நடவடிக்கைகள் அதற்கு உதவாது.

பாராளுமன்றம் உட்பட அரச நிறுவனங்கள் அனைத்தும், மக்களின் வரிப்பணத்திலேயே கொண்டுநடத்தப்படுகின்றது. பொருளாதார நெருக்கடியான இந்த காலகட்டத்தில், ஆகையால், செலவுகளை கட்டுப்படுத்தி, வீண் செலவுகளுக்கு வழிசமைக்காது நன்கு திட்டமிட்டு, அமர்வுகளை நடத்துதலே சிறந்தது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எதிரிகளுடன் ஒருபோதும் கடும் போக்குடன் நடந்துகொள்ளக் கூடாது. எதிரிகளுடனும் கூட, நாம் இணங்கிப் போகக் கூடிய குணாம்சங்கள் இருக்கும். அந்தக் குணாம்சங்களின் ஊடாக நாம் எதிரிகளுடன் பழகுவது வாழ்க்கையில் நிம்மதி பெருகத் தடை இருக்காது. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்ப்பது அவசியமில்லை. பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது, வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன், எவரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்காது, பணிவுடன் பேசுவதே, நிரந்தர வெற்றிக்கு வழி!

மனிதனுடன் மட்டுமல்ல; மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களையும் பாசத்துடன் நோக்கினால், அவை உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள், அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம், கோபம் போன்ற துர்க்குணங்கள் தனது, குடும்பம், அயலட்டை, கிராமம், தேசம் என்பவற்றின் நலனுக்கும் கேடானவை பதற்றம் வேண்டாம், சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பேருந்துகள் வர வேண்டும்



கிளிநொச்சி மேற்கில் உள்ள இரு வைத்தியசாலைகளுக்கு பேருந்துகள் வந்து செல்லக் கூடிய வகையில் வழித் தடங்களை உருவாக்குங்கள் என கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மேற்கிற்கான பேருந்து சேவைகள் நடைபெறுகின்ற போதிலும் அக்கராயன் பிரதேச வைத்தியசாலை, முழங்காவில் ஆதார வைத்தியசாலை என்பவற்றிற்கு வருகை தரும் நோயாளர்கள் 800 மீற்றர் தூரம் வரை நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இது தொடர்பாகக் கடந்த காலங்களில் மாவட்டச் செயலகத்திலும் பூநகரி பிரதேச செயலகத்திலும் முதியோர் சங்கங்களினால் மனுக்கள் கையளிக்கப்பட்டன. ஆனால் பேருந்துகள் வைத்தியசாலைக்கு வருவதில்லை. இதன் காரணமாக நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர் பேருந்துகள் 800 மீற்றர் தூரத்தில் உள்ள முழங்காவில் ஆதார வைத்தியசாலைக்கும் வந்து திரும்புவதன் மூலம் கிளிநொச்சி மேற்கில் உள்ள பல கிராமங்களின் மக்கள் நன்மையடைவார்கள். இந்த விடயம் தொடர்பான உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்

ஜனாதிபதித் தேர்தல் நடக்கப்போகும்

# அதிர்ச்சிகளும் ஆச்சரியங்களும்

முருகானந்தம் தவம்

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான காய் நகர்த்தல்கள் ஒரு புறம் மூடிய அறைகளுக்குள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்க மறு புறத்தால் அந்த முயற்சிகள் தோல்வி கண்டு தேர்தலை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அதில் வெற்றி பெறுவதற்கான எதிர்கட்சிகளை பிளவுபடுத்தும், சூழ்ச்சிகளும் எம்.பி.க்களை வளைத்துப்போடும் பேரம்பேசுதல்களும் தீவிரம் பெற்றுள்ளதால் இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது.

அரசியல் சூதாட்டத்தில் குள்ள நரியான ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவுக்கும் ராஜபக்ஷக்களின் குடும்பக்கட்சியான பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கும் ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸநாயக்கவுக்குமிடையில் நடக்கும் இந்த அரசியல் சதுரங்க ஆட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்டம் அபாரமாகவேயுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் சதுரங்க ஆட்டத்தில் பண பலமும் அதிகார பலமும் அரசியல் களத்தில் புகுந்து விளையாடுகின்றன. சிறப்பு சலுகைகளும் நிதி ஒதுக்கீடுகளும் அள்ளி வழங்கப்படுகின்றன. இதனால் எதிர்க் கட்சிகள் பிளவுபடுத்தப்படுகின்றன, எம்.பிக்கள் தட்டித் தூக்கப்படுகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக பிரசார போரில் ஈடுபட வேண்டிய நேரத்தில் ஒவ்வொரு கட்சிகளும் கட்சிகளின் தலைவர்களும் தமது கட்சியையும் தமது எம்.பிக்களையும் பாதுகாக்க தற்பாதுகாப்பு போரில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர் .

தனது ஜனாதிபதிக் கனவைக் கலைத்த சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியையும் தனது கட்சியையும் தன்னையும் முகவரியற்றவர்களாக்கிய ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவையும் இலக்கு வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆடும் ஆட்டத்தினால் இவ்விரு கட்சிகளும் பிளவடைந்தும் பலவீனமடைந்தும் வருகின்றன. இவ்விரு கட்சிகளுக்குள் இருக்கும் தனது 'சிலிப்பர் செல்'களை வைத்து ரணில் விக்ரமசிங்க தனது ஆட்டத்தைக் கன கச்சிதமாக முன்னெடுத்து வருகின்றார்.

ரணில் விக்ரமசிங்கவின் இந்த ஆட்டத்தில் ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன கட்சிதான் தனது 'கர்மா'வை அதிகம் அனுபவிக்கத் தொடங்கியுள்ளது. ராஜபக்ஷவினரும், அவர்களின் கட்சியான பொதுஜன பெரமுனவும் ஆட்சியிலும் அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தியிருந்த காலப்பகுதியில் ஏனைய கட்சிகளைப் பிளவுபடுத்தியும் எம்.பிக்களை விலைக்கு வாங்கியும் இன்னும் சில எம்.பிக்களை வழக்குகளைப் போட்டு அச்சுறுத்தி தமது பக்கத்துக்கு இழுத்தும் அரசியலில் ஆட்டம் காட்டியிருந்தனர் ராஜபக்ஷக்களின் இந்த அரசியல் ஆட்டத்தினால் அப்போது அதிகமாகப் பாதிக்கப்பட்டது ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சிதான். 2007ஆம் ஆண்டில் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய உள்ளிட்ட 17 எம்.பிக்களை ஒரேயடியாக ராஜபக்ஷக்கள் பிரித்தெடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சிக்கு அடித்தளமிட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் மட்டும் ராஜபக்ஷக்களின் ஆட்டம் முடியவில்லை. ஜே.வி.பி.யையும் உடைத்தார்கள். அக்கட்சியைச் சேர்ந்த விமல் வீரவன்ச, நந்தன குணதிலக உள்ளிட்ட சிலரையும் தம்வசப்படுத்தினர். அதேபோன்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பியசேன, வியாழேந்திரன் எம்.பி.க்களைக்கூட பிரித்தெடுக்கும் அளவுக்கு ராஜபக்ஷக்களின் ஆட்டம் அமோகமாகவிருந்தது. இனி நாட்டில் ராஜபக்ஷக்கள் யுகம் தான் என முடிவுக்கு வந்த ஏனைய சிறுபான்மையினக் கட்சிகளும் சிறிய கட்சிகளும் ராஜபக்ஷக்களிடம் சரணடைந்ததால் ராஜபக்ஷக்கள் தமது குடும்பக் கட்சியையும் குடும்ப ஆட்சியையும் நாட்டில் நிலை நிறுத்தினர்.

கட்சி உடைப்புக்கள், எம்.பி.க்களை விலைக்கு வாங்குதல் போன்ற சூழ்ச்சிகளினால் அரசியலில் அசுர பலமடைந்த ராஜபக்ஷக்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் பெரு வெற்றிபெற்றதுடன் தமக்கு ஏற்றவாறு அரசியலமைப்புத் திருத்தங்களையும் கொண்டு வந்து ஒரு அசைக்க முடியாத குடும்ப ஆட்சியையே நடத்தினர். ஆனால், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது போல் ராஜபக்ஷக்கள் ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைக்கவும், தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவும் அன்று செய்த வினைகளின் 'கர்மா' இன்று அவர்களையே 'அவர்களினால் பாதிக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்க மூலமாகத் தாக்குகின்றது தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ராஜபக்ஷக்களை பிளவுபடுத்தி 'மொட்டு' 'கட்சியைச் சிதைத்து வருகின்றார்.

ரணில் விக்ரமசிங்க ஒரு பக்கத்தால் ராஜபக்ஷக்களின் 'மொட்டு'வை விரிய விடாமல் வாட வைக்க அதன் விளைவாகச் செத்த நோயிலிருந்து உண்ணிகள் விலகுவது போன்று மொட்டுக் கட்சியுடன் கூட்டணி வைத்திருந்த விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பில தலைமையிலான பிவிருது ஹெல உறுமய, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, யுத்துகம அமைப்பு என்பனவும் ராஜபக்ஷக்களி கைவிட்டு வெளியேறி புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளன.

அதேவேளை, கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது அரசியல் சலுகைகளுக்காகவும் அரசியல் அழுத்தங்கள் காரணமாகவும் ராஜபக்ஷக்களின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்த ஏழு பங்காளிக் கட்சிகளான தற்போது அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி, இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகம் ,அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அணி, அதாவுல்லா எம்.பி. தலைமையிலான தேசிய காங்கிரஸ் மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்), தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்பன தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து அவரிடம் சரணடைந்துள்ளன.

அதுமட்டுமன்றி, ரணில் விக்ரமசிங்கவின் ஜனாதிபதிக் கனவைக் கலைத்த, அவரின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை அரசியலில் காணாமல் செய்த சஜித் பிரேமதாச தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்களான சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகா உள்ளிட்ட பலரும் ரணில் விக்ரமசிங்க பக்கம் செல்வதற்கான பேரம் பேசுதல்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் மட்டுமன்றி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பவற்றின் எம்.பிக்கள் சிலருடனும் பேரம் பேசுதல்களில் ரணில் விக்ரமசிங்க ஈடுபட்டுள்ளதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் பிளவுகளை ஏற்படுத்தி ஆதரவான அணி ஒன்றையும் உருவாக்கியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க உயர் நீதிமன்றம் மறுத்துள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவது பெருமளவுக்கு உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், இன்னும் பல அதிர்ச்சிகளும் ஆச்சரியங்களும் துரோகத்தனங்களும் கட்சித் தாவல்களும் பிளவுபடுத்தல்களும் இடம்பெறுவதற்கான அரசியல் கள நிலைமைகளே காணப்படுகின்றன.

# சுமை தாங்கி





றொசில்டா அன்டன்

அப்பாவின் அறையை தூசி தட்டி துப்புரவு செய்ய எண்ணி மகள் தாரணி அறைக் கதவை திறந்தாள். அப்பாவின் இறப்பு அவளை பாதித்திருந்தாலும் உயிருடன் இருக்கும் போது அவரை ஒரு பொருட்டாகவே எண்ணியதில்லை.

“அம்மா தாரணி எனக்கு குடிக்க தண்ணி கொண்டு வந்து தாங்கம்மா” கேட்டும் கேட்காதவளாய் அங்கே தாரணி. ஏன் இந்த போக்கு என்பது அவள் அன்று உணரவில்லை. இன்று அப்பாவின் இழப்பு பெரியதொரு துன்பமே. தாரணி, கவிதா இருவரும் சகோதரிகள். மூத்தவள் தாரணி சற்று சுயநலம் கூடியவள். கவிதா பாசக்காரி. அம்மாவும் அப்பாவும் சேர்ந்தே வேலைக்கு செல்வார்கள். போகும் வழியில் மகள்களையும் பாடசாலையில் இறக்கி விடுவார்கள். “தாரணி நீ மூத்த பிள்ளை பக்குவம் தெரிந்தவள், ஸ்கூல் போய் வந்ததும் கொஞ்ச நேரமாவது வீட்டை சுத்தம் செய்யலாம் தானே” அம்மா எப்பவும் முணுமுணுத்துக் கொண்டே இருப்பாள். தாரணி சிறிதும் பெற்றோரின் பேச்சை கேட்பதில்லை. தந்தையை மதிப்பதே இல்லை.

ஆனால், மகள்களின் தேவைகளை அறிந்து மனுசன் படாதப்பாடு பட்டு அவர்களின் ஆசைகளை நிறைவேற்றுவார். அம்மா கீதாவின் நச்சரிப்பும் இந்த மனுசனை படாதபாடு படுத்தியது. பாவம் வேலை விட்ட வந்தால் கூட சாப்பாடு போட்டு அன்பாக கதைப்பதற்கு கூட ஆளில்லாத தனிமையில் அன்று அப்பா என்ன பாடுப்பட்டிருப்பார்.

அப்பாவின் நண்பர் ஆனந் மாமா தான் அப்பாவின் உணர்வுகளை புரிந்தவர். அவர் அப்பாவின் இறப்பு வீட்டிற்கு வந்த பின்பே தாரணி தன் தந்தையின் உள்ளன்பை புரிந்துக்கொண்டாள். புரிந்து என்ன பயன். அப்பாவின் உயிருள்ள நினைவுகள் மட்டுமே எஞ்சியிருந்தன.

தாரணி அப்பாவின் சாய் கதிரையில் சற்றே அமர்ந்த கண்மூடி தந்தையின் நினைவுகளுடன் பயணித்தாள். அடைமழையில் அன்று மூன்று மணிக்கு உயர்தர வகுப்பிற்கான கருத்தரங்கு நான்கு மணிக்கு கெமிஸ்ரி வகுப்பு அது முடிய ஏழுமணிக்கு நண்பியின் பிறந்தநாளுக்கு அவள் அழைத்து இருந்தாள். பரபரப்புடன் அப்பாவிற்கு தொலைபேசி அழைப்பு எடுத்தாள் தாரணி.

“அப்பா இன்று மூன்று மணில இருந்து எனக்கு வகுப்பு இருக்குது கொண்டு போய் விடுங்க” என்றாள் தாரணி அதற்கு அப்பா “எனக்கு இன்று கொஞ்சம் வேலை கூட தாரு அம்மாட்ட கூட்டி போக சொல்லு” என்றார். அப்பாவை ஏசியவள் போனை அடித்தாற் போல வைத்து விட்டாள். அன்று ஓய்வாக இருந்த தாயிடம் கேட்டிருக்கலாம்.

ஆனால், தாரணி எதுவுமே அம்மாவிடம் கூறாது டியுசன் வகுப்பிற்கு செல்வதற்கான ஆயத்தம் செய்தாள். “அம்மா நான் டியூசன் போறன் இரவ எட்டு மணியாகும் வர” என்று கூறியவள் சிறிதும் நிற்காமல் ஸ்கூட்டியைத் தட்டியவள் விரைந்தாள். “அப்பா ஐந்து மணிக்கு வீட்ட வருவார் அம்மாட்ட நல்லா கிழி வாங்கட்டும்” என்று தனக்குள்ளே தாரணி முணுமுணுத்தாள். கோகுல் வேலை விட்டு வந்ததுமே அம்மா தனது வழமையான பல்லவியை தொடங்கினாள்.

“மூன்று மணிக்கு அவளுக்கு கருத்தரங்க என்று தெரியும் தானே கொஞ்சம் சமாளித்து வந்து அவளை டியூசனில் விட்டிருக்கலாம்” என்று தன் இசையை பல்லவியுடன் தொடங்கினாள்.

“அம்மா அப்பாட வேலையும் அவர் பார்க்கனும் வீட்டையும் பார்க்கனும் வீட்டில மூன்று ஸ்கூட்டி இருக்கு அவர்அவர் தேவைக்கு தானே அதை பயன்படுத்தலாமே....” என்றாள் கவிதா.

“நீ... உங்கப்பனுக்கு தானே சப்போர்ட் பண்ணவ” அம்மாவின் கோபத்தின் உச்சம் இந்த வார்த்தைகள்.

“மழையில் நனைந்தப்படியால அப்பாக்கு இரண்டு நாட்களாய் இருமல், காயச்சல் பாவம் மருந்து எடுக்க கூட ஒருநாள் என்றாலும் கூட்டிச் சென்றதே கிடையாது”

தாரணி தந்தையின் நினைவில் இருந்து மீண்டாள். அப்பாவின் அறையை துப்புரவு செய்யும் போது, அவரின் டையரி குறிப்புகள் பலவற்றை உள்ளடக்கியதாக தாரணியின் கையில் கிடைத்தது. அவள் அதை ஆறுதலாக படிக்கலாம் என்று தூசி தட்டி எடுத்து வைத்தாள். அம்மா கவிதாவின் திருமணத்தின் பின் அவளுடனே சென்று வாழத் தொடங்கினார்.

பேரப்பிள்ளைகளுடன் மகிழ்வாகவே இருக்கின்றாள். தாரணி திருமணம் முடித்து பல வருடங்களாக பிள்ளை இல்லை என்பதால் பிள்ளை ஒன்றை தத்து எடுத்து வளர்க்கின்றாள். தூசி தட்டியவளுக்கு மூக்கிற்குள் தூசி சென்றதால் தும்மல் உடனே அவள் மகன் சதீஸ் மூக்கிற்கு அணிய துண்டு ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தான். அவள் கண்களில் கண்ணீர்.

“ஏன் அம்மா அழுகிறிங்க” பிஞ்சு குரலைக் கேட்டதுமே கண்களை துடைத்தவள் ...

அம்மாக்கு ஒன்று என்றதும் துடிக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஏன் அப்பாவிற்காக துடிப்பதில்லை. அப்பா எத்தனை நாள் உண்மையான அன்பிற்காக ஏங்கியிருப்பார். பாவம் ஒரு நாளாவது அவருடன் மனம் விட்டு கதைத்திருப்பேனா? அவரின் உணர்வுகளை மதித்திருப்பேனா? தன்னையே நொந்து கொண்டாள் தாரணி. அப்பாவின் டயரியில் இருந்த அவரின் கையெழுத்துக்கள் தாரணியின் நெஞ்சை அழுத்தியது “கவிதா நீ பாசக்காரி ஆனால் பாசத்தை உனக்குள் வைத்து கொண்டாய். அம்மாவிற்கு காட்டிய அன்பில் ஒரு துளி கூட என்னிடம் காட்டுவதற்கு உங்கள் இருவருக்கும் முடியவில்லை. வேலை விட்ட வந்தால் வரவற்க கூட ஆளில்லை. அம்மா வேலை விட்டு வந்துமே” அம்மா என்று ஓடி போய் அணைத்த உங்கள் கரம் என்னை ஓராமாய் தள்ளி விட்டது ஏன்? தேவை என்றால் மட்டும் என்னை அதட்டி உருட்டி காரியத்தை சாதித்த நீங்கள் ஒரு நாளாவது” அப்பா சாப்பிட்டிங்களா?, தேத்தண்ணி ஊற்றட்டுமா?, தலைவலியா?, வேலை கஷ்டமா என்று கூட கேட்க மனம் வந்ததில்லை” அப்பாவின் ஏக்கங்களை தொடர்ந்து படித்தவள் விம்மி விம்மி அழுதாள்.

“அப்பா... அப்பா...” என்று குரல் உயர்த்தி அழுதவளை கணவன் சத்தியனால் தேற்றவே முடியவில்லை. கணவனின் மார்பில் சாய்ந்தவள் அவனை இறுக அணைத்து ஆறுதல் தேடினாள்.

“அப்பாவும் இந்த ஆறுதலை தானே தேடியிருப்பார் சத்தி நான் ஏன் அவரை புரிந்து கொள்ளவில்லை, அம்மாவும் நித்தமும் அப்பாவுடன் சண்டை பிடிப்பார். நண்பர்களை பார்த்து விட்டு வர கூட அவருக்கு அனுமதி இல்லை. ஏன்? எதற்கு? என்ற கேள்வி கணைகளால் அப்பாவை துளைத்து எடுப்பார். பாவம் மனுசன் தன் ஆசைகளை அடக்கி டயரில் எழுதி தன் மன வேதனையை அடக்கி விட்டார் போலும் என்று சத்தியனிடம் அழுது கொண்டே தழுதழுத்த குரலில் கூறினாள். இப்படி எத்தனை தந்தைமார் குடும்ப நலனுக்காக தன்னையே வருத்தி வாழ்கின்றார்கள். பெற்ற பிள்ளைகள் அவர்களை புரிந்துக்கொள்ளும் போது அவர்கள் உலகத்திலே இருக்க மாட்டார்கள். இழப்பை ஈடு செய்ய முடியாத எத்தனை தாரணிகள் இந்த மண்ணிலே....

# தெலுங்கு நகருக்கு ஒரு பயணம்



ச.தனுஷ்கா,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.




(புதன்கிழமை (10) தொடர்ச்சி...)

ஒரு நாள் வாழ்க்கைக்குத் தேவையான ஊதியத்தை இலக்காகக் கொண்டு தொழில் புரிந்தனர். இவர்களுக்கு விவசாயத்தில் ஈடுபடுவதற்கான ஆர்வமும் இருக்கவில்லை. அன்று அதற்கான போதிய நில உரிமையும் அவர்களிடத்தில் காணப்படவில்லை. வேறு தொழிலைப் பழகுவதற்கான சந்தர்ப்பமும் பிற இன மக்களால் வழங்கப்படவில்லை. இத்தனை கசப்பான நினைவுகளைச் சகித்துக் கொண்டே பிறரின் எதிர்காலத்தைக் கணித்துக் கூறுகின்றவர்களுக்கு ஏனோ? தமது வாழ்க்கையைக் கணித்துக்கொள்ள இயலவில்லை என்ற கேள்வியை மனதில் எழுகின்றது.

தெலுங்கு மக்கள் தமது ஆரம்பக் காலத்தில் இத்தனை வேதனைகளைத் தாங்கியிருந்தாலும்கூட, இன்று தெலுங்கு நகரில் உள்ள மக்களின் வாழ்க்கை முறையோ என்னை வியப்பில் ஆழ்த்துகின்றது. அன்று நில உரிமை கல்வி உரிமை சாதிய சமூக ஒடுக்குமுறைகள், அடக்குமுறைகள் போன்ற அனைத்தையும் தாண்டி இன்று வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரினால் பல்வேறு இடங்களில் இவர்கள் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். இதில் சிலர் தமது பிறப்பிடமான இந்தியாவிற்கே தஞ்சம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 2007ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இம்மக்களுக்கான காணி உரிமையுடன் வீட்டுத் திட்டமும் வழங்கப்பட்டது. அத்துடன், நாடோடி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. மேலும், இலங்கை அரசினால் வழங்கப்படும் அனைத்து சலுகைகளையும் பெறுவதற்கான தகுதி உடையவர்களாயினர். உதாரணத்திற்கு சமுர்த்தி கொடுப்பனவையும் பெறுகின்றனர்.

இது நாள் வரையிலும் நிரந்தர இடமின்றி, வேறு தொழில் கற்றுக் கொள்ள முடியாமல் இருந்தவர்கள் இன்று வர்த்தகத்தில் வெற்றிகரமாக ஈடுபடுகின்றனர். தம்பலகாமம் கிராமத்தின் தெலுங்கு நகரிலுள்ள தெலுங்கு மக்களின் மிகப் பிரதானமான வர்த்தகமாக ஊதுபத்திகள் தயாரிப்பு காணப்படுகின்றது. கொழும்பிலிருந்து ஊதுபத்திகள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் கொண்டுவரப்பட்டு, தமது சமூக மக்களது ஒத்துழைப்புடன் இப்பணியில் ஈடுபடுகின்றனர். மேலும் சிலர் தம்பலகாமத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணி புரிகின்றனர். குடும்பத்தில் உள்ள ஆண்கள் ஊதுபத்திகளை வெளி மாவட்டங்களுக்கு விற்பனை செய்கின்றனர். பெண்கள் தம்பலகாமத்தை சுற்றியுள்ள இடங்களான கிண்ணியா, கந்தளாய் திருகோணமலையின் நகர்ப்புறப் பகுதிகளில் விற்பனையை மேற்கொள்கின்றனர்



காலத்திற்கேற்ப இவர்களது வாழ்வியல் முறைகளிலும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. திருமண சடங்கும் இவர்களது மத வழிபாடும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தமது சமூகத்தில் உள்ளவர்களை மாத்திரம் திருமணம் செய்யாது, சிங்களவர்கள், முஸ்லிம்கள் என திருமணம் செய்யும் போக்கும் அவதானிக்கப்பட்டது. அதேபோல, மிக முக்கியமான மாற்றமாக இச்சமூகத்தவர்களது மத மாற்றம் காணப்படுகிறது. தெலுங்கு நகரில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் கத்தோலிக்க சமயத்தை தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மதம் ஒவ்வொருத்தரது தனிப்பட்ட உரிமையாகும். எனினும், கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டு, இந்துக் கோயில்களில் குறி சொல்லுதலும் சாஸ்திரம் கூறுவதும் தமது தொழிலுக்காகவே என்று அம்மக்கள் வெளிப்படையாகவே கூறுகின்றனர். சிலர் மதமாற்றத்தின் பின்னர் தமது பரம்பரை தொழிலான சாஸ்திரம் பார்க்கும் தொழிலைக் கைவிட்டுள்ளனர். இன்று சாஸ்திரம் பார்க்கும் தொழில் அச்சமூக மக்களிடையே படிப்படியாகக் குறைந்து வருகிறது. இதற்கு மதமாற்றம் ஒரு காரணமாக இருந்தாலும் தாழ்வு மனப்பான்மையும் ஒரு காரணமாகும்.



பாடசாலைகளில் தமது பிள்ளைகள் இதனால் அவமானத்திற்கு உள்ளாவதுடன், ஒதுக்கி வைக்கப்படுகின்றனர்.இதனால் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் சமூகத்தில் ஏளனமான பார்வையிலிருந்து விடுபடுவதற்காகவும் இன்று பலர் இத்தொழிலில் இருந்து விலகியுள்ளனர்.மேலும் சாஸ்திரம் கூறுவதால் ஈட்டும் வருமானத்தைக் கொண்டு இன்றைய பொருளாதார நெருக்கடியான காலத்தில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது சாத்தியமற்றது. இதனால் தமது சந்ததிகளைக் கல்வியில் எந்தக் குறையுமின்றி பெற்றோர்கள் முழு முயற்சியுடன் உறுதுணையாகப் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வேறு தொழில்களை நாடுகின்றனர்.

தம்பலகாமம் தி/தி/குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்தில் தெலுங்கு நகரிலுள்ளவர்களின் பிள்ளைகள் பெரும்பான்மையானோர் பாடசாலைக் கல்வியைத் தொடர்கின்றனர்.தமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக தமது தாய் மொழியையும் இன்று விட்டுக்கொடுத்து வாழ்கின்றனர். சிறு வயது முதல் பிள்ளைகளிடம் தமிழ் மொழியில் உரையாடுவதாகவும் பெரியவர்கள் தங்களுக்குள் மாத்திரமே தெலுங்கில் உரையாடுகின்றனர். ஏனெனில் இலங்கையில் தெலுங்கு மொழி பாவனையில் இல்லை. இப்பின்னணியில் தமது பிள்ளைகளுக்கு மொழி ரீதியான புரிதலில் பிரச்சினைகள், கல்வியில் சிக்கல்கள் ஏற்படாமல் இருப்பதற்கு தமது தெலுங்கு மொழியை ஊக்கப்படுத்தாது தமிழ் மொழியை கற்றுக் கொடுக்கின்றனர். ஆரம்பத்தில் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைத் தெலுங்கு பேசுபவர்கள் என்று புறமொதிக்கியதாகவும் தற்பொழுது இந்த வேற்றுமையின்றி சகலரும் பழகி வருகின்றனர் என்றனர் தெலுங்கு மக்கள்.இம்மக்களின் அதிகபட்ச இலக்காக:இவர்கள் சந்ததியினர் தாம் மேற்கொண்ட சாஸ்திர தொழிலுக்குச் செல்லாது சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதாகும். இன்று தம் சமூகத்தின் பிள்ளைகள் வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் பலர் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று சாதித்துள்ளனர். என்று அம்மக்கள் கர்வத்துடன் கூறுகின்றனர். ’எங்கள் துயரம், சாஸ்திரத் தொழில், தெலுங்கு மொழி எல்லாம் எங்களோடு முடியட்டும். எங்கள் சந்ததிக்கு எடுத்துச் செல்ல மாட்டோம்’என்ற இம்மக்களது கருத்தியலில் சுயநலம் தென்படவில்லை.

தமது அடையாளம், பரம்பரை தொழில், மொழி, அழிகிறதே என்ற வேதனை ஒரு துளியும் இவர்களிடத்தில் இல்லை.

மாறாக இவையனைத்தையும் அம்மக்கள் மாற்றத்திற்கு இடும் அத்திவாரமாகவே நோக்குகின்றனர். தமது சமூகத்தின் அடையாளத்தைக் கல்வியால் நிலை நிறுத்தி வருகின்றனர். இன்றுமே அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். கல்வி ஒருவரது அடையாளத்தை, வர்க்க வேறுபாடுகளைத் தகர்க்கும் என்பதற்குத் தெலுங்கு நகரில் உள்ள தெலுங்கு மக்கள் சிறந்து எடுத்துக்காட்டாகும். இது ஒரு தலைமுறையின் வளர்ச்சியும் வெற்றியுமாகும்.

(முற்றும்)



அகர்தலா

## எச்.ஐ.வி. பாதிப்பில்
# 828 மாணவர்கள்

திரிபுரா மாநிலத்தில் 800க்கும் மேற்பட்ட பாடசாலை, கல்லூரி மாணவர்களுக்கு எச்.ஐ.வி. தொற்று உறுதியாகியுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், 47 மாணவர்கள் எய்ட்ஸ் பாதிப்பால் உயிரிழந்துள்ளனர்.

திரிபுரா மாநிலத்தில் 220 பள்ளிகள் மற்றும் 24 கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் ஊசி மூலம் செலுத்திக்கொள்ளும் போதை பழக்கத்திற்கு அடிமையாகி இருப்பதாகப் புகார் கொடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் நடைபெற்ற சோதனையில் 828 மாணவர்களுக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இத்தொற்றினால் பாதிக்கப்பட்ட 47 மாணவர்கள் உயிரிழந்திருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

புகாருக்கு உள்ளான 220 பாடசாலைகள் மற்றும் 24 கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் பெரும்பாலானோர் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களில் பலர் போதைக்கு




அடிமையாகியிருப்பதும் தெரியவந்துள்ளது. ஒரே ஊசி மூலம் பலர் போதை மருந்தை உடலில் செலுத்திக்கொள்வதால் எச்.ஐ.வி. பரவியிருக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

வேலூர்

## சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த
# முதியவருக்கு சிறை



வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த கிளித்தான் பட்டறை பகுதியைச் சேர்ந்தவர் அப்துல்கனி (55). தமிழ்நாடு போக்குவரத்துக் கழக முன்னாள் ஊழியராக இருந்த இவர், கடந்த 2022ஆம் ஆண்டு அதே பகுதியில் வசிக்கும் தனது நண்பனின் 6 வயது மகளை இனிப்பு கொடுத்து ஏமாற்றி அழைத்துச் சென்று பாலியல் தொல்லைக் கொடுத்திருக்கிறார்.

இதுகுறித்து சிறுமியின் தாய் அளித்த புகாரின் பேரில் காட்பாடி பொலிஸார் அவரை போக்சோ வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

விசாரணையில் சிறுமிக்கு பாலியல் தொல்லைக் கொடுத்தது உறுதியான நிலையில், அப்துல்கனிக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 20 ஆயிரம் அபராதமும் விதித்து வேலூர் போக்சோ நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

ஹைதராபாத்

## ஆணாக அங்கீகரிக்கப்பட்ட
# முதல் பெண் அதிகாரி

நாட்டிலேயே முதன்முறையாக, பெண் ஐ.ஆர்.எஸ். அதிகாரி ஒருவர் தனது பெயர் மற்றும் பாலினத்தை ஆணாக மாற்றக்கோரிய மனுவை மத்திய அரசு ஏற்று அதற்கான உத்தரவையும் பிறப்பித்துள்ளது.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் வசித்து வருபவர் எம்.எஸ்.எம். அனுசுயா. இவர் தற்போது, ஹைதராபாத்தில் உள்ள மத்திய கலால் வரி மற்றும் சேவை வரி மேன்முறையீட்டு தீர்ப்பாயத்தின் மாநில இணை ஆணையராக பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில்தான் தன் பெயரையும் பாலினத்தையும் மாற்றக் கோரி மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரிய வருவாய்த் துறையிடம் மனு அளித்திருக்கிறார்.

இதனைப் பரிசீலனை செய்த மத்திய நிதி அமைச்சகம் இவரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அதற்கான உத்தரவைக் கடந்த 9ஆம் திகதி பிறப்பித்துள்ளது. அதில், “ஹைதராபாத்தில் உள்ள செஸ்டாட் தலைமை ஆணையர் அலுவலகத்தில் இணை ஆணையராக நியமிக்கப்பட்ட Miss.எம்.அனுசுயா, தனது பெயரை Mr.எம்.அனுகதிர் சூர்யா என்று மாற்றவும், தனது பாலினத்தை பெண்ணிலிருந்து ஆணாக மாற்றவும் கோரிக்கை வைத்துள்ளார்.

அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. அதன்படி இனிமேல், அனைத்து அதிகாரப்பூர்வ பதிவுகளிலும் அனுசுயா ‘Mr.எம்.அனுகதிர் சூர்யா’ என்று அங்கீகரிக்கப்படுவார்” என்று தெரிவித்துள்ளது.

இதன் மூலம், இந்திய சிவில் சர்வீஸ் வரலாற்றிலேயே பெண்ணிலிருந்து ஆணாக அங்கீகரிக்கப்பட்ட முதல் ஐ.ஆர்.எஸ். அதிகாரி என்ற பெருமையை அனுகதிர் சூர்யா பெற்றிருக்கிறார்.






வொஷிங்டன்

# “போரை நிறுத்த ரஷ்யாவின் உறவை பயன்படுத்துங்கள்”
## இந்தியாவுக்கு அமெரிக்கா வலியுறுத்தல்



‘போரை நிறுத்துவதற்கு ரஷ்யா உடனான உறவை இந்தியா பயன்படுத்த வேண்டும்” என அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் மார்கரெட் மேக்லியோட் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: “உக்ரைன்- ரஷ்யா இடையே நீண்ட காலமாக போர் நடந்து வருகிறது. போரை நிறுத்துவதற்கு ரஷ்யா உடனான உறவை இந்தியா பயன்படுத்த வேண்டும். உக்ரைனில் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளுக்கு இந்தியா உட்பட அனைத்து நாடுகளும் ஆதரவளிப்பது முக்கியமானதாக நாங்கள் கருதுகிறோம்.

இதனை அனைத்து நாடுகளும் உணர வேண்டியது அவசியம். போருக்கு எதிராக ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்க இந்தியா இந்த சிறப்பு கூட்டாண்மையைப் பயன்படுத்த விரும்புகிறோம். குழந்தைகள் மருத்துவமனை மீது ரஷ்யா தாக்குதல் நடத்துகிறது. உக்ரைனில் ரஷ்யாவின் போர் ஐ.நா. சாசனத்தை மீறுவதாகும்” இவ்வாறு அவர் கூறினார்.

துருக்கி

## ஹிஜாப் அணிய மறுத்ததால்
# விமான அலுவலகத்துக்கு பூட்டு

விமான நிறுவனத்தில் பணியாற்றும் ஈரான் நாட்டை சேர்ந்த பெண்கள் ஹிஜாப் அணிய மறுத்ததன் காரணமாக, அப்பெண்கள் பணியாற்றிய துருக்கி விமான நிறுவன அலுவலகத்தை ஈரான் அரசு மூடியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இஸ்லாமிய மத சட்டங்களைக் கடுமையாகப் பின்பற்றி வரும் ஈரானில் பெண்கள் மற்றும் 9 வயதிற்கு மேற்பட்ட சிறுமிகள் இஸ்லாமிய மத உடையான ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அந்நாட்டின் தெஹ்ரானில் ஹிஜாப் சரியாக அணியவில்லை என கூறி பொலிஸார் நடத்திய தாக்குதலில் மாஷா அமினி (வயது 22) என்ற இளம்பெண் உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து அந்நாட்டில் போராட்டங்கள் வெடித்தன. ஆனால், அந்த போராட்டங்களை ஈரான் அரசு கடுமையாக ஒடுக்கியது.

மேலும், போராட்டத்தில் ஈடுபட்ட பலருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட நிலையில், ஹிஜாப் சட்டங்களையும் கடுமையாக்கியது.

இதனிடையே, துருக்கி விமான நிறுவனத்தின் கிளை அலுவலகம் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் செயல்பட்டு வருகிறது

இந்த விமான நிறுவனத்தில் பணியாற்றும் ஈரான் நாட்டைச் சேர்ந்த பெண்கள் ஹிஜாப் அணியாமல் பணி செய்வதாக பொலிஸாருக்கு தெரியவந்தது

இந்நிலையில், விமான நிறுவன அலுவலகத்திற்குச் சென்ற ஈரான் பொலிஸார் அலுவலகத்திற்குச் சீல் வைத்தனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



## யூரோ: பிரான்ஸை வென்று
# இறுதிப் போட்டியில் ஸ்பெய்ன்

ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஸ்பெய்ன் தகுதி பெற்றுள்ளது.

புதன்கிழமை (10) நடைபெற்ற பிரான்ஸுடனான அரையிறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே இறுதிப் போட்டிக்கு ஸ்பெய்ன் தகுதி பெற்றது.

ஸ்பெய்ன் சார்பாக லமினே யமால், டனி ஒல்மோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பிரான்ஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை றன்டல் கொலோ முவானி பெற்றிருந்தார்.



## எல்.பி.எல்:
# கோல் மார்வெல்ஸை வீழ்த்திய தம்புள்ள சிக்ஸர்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), தம்புள்ளயில் செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற கோல் மார்வெல்ஸுடனான போட்டியில் தம்புள்ள சிக்ஸர்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கோல் மார்வெல்ஸ்

தம்புள்ள சிக்ஸர்ஸ்: 160/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: சமிந்து விக்ரமசிங்க ஆ.இ 56 (34), லஹிரு உதார 26 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: கவிந்து நதீஷன் 3/16 [4], இசுரு உதான 2/16 [3], மகேஷ் தீக்‌ஷன 1/27 [4], டுவைன் பிறிட்டோறியஸ் 1/29 [4])

கோல் மார்வெல்ஸ்: 135/10 (19.4 ஓவ.) (துடுப்பாட்டம்: இசுரு உதான 72 (38) ஓட்டங்கள். பந்துவீச்சு: துஷான் ஹேமந்த 3/33 [4], நுவான் துஷார 3/37 [4], சமிந்து விக்ரமசிங்க 2/1 [0.4], டில்ஷான் மதுஷங்க 1/16 [4], நுவான் பிரதீப் 1/32 [4], மொஹமட் நபி 0/11 [3])

போட்டியின் நாயகன்: சமிந்து விக்ரமசிங்க

இந்நிலையில், மற்றைய போட்டியில் ஜஃப்னா கிங்ஸை நடப்புச் சம்பியன்களான கண்டி பல்கொன்ஸ் வென்றது.



## கோப்பா அமெரிக்கா
# இறுதிப் போட்டியில் ஆர்ஜென்டீனா



ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்று வரும் தென்னமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளன கோப்பா அமெரிக்கா தொடரின் இறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியன்களான ஆர்ஜென்டீனா தகுதி பெற்றுள்ளது.

புதன்கிழமை (10) நடைபெற்ற கனடாவுடனான அரையிறுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றே இறுதிப் போட்டிக்கு ஆர்ஜென்டீனா தகுதி பெற்றுள்ளது.

ஆர்ஜென்டீனா சார்பாக ஜூலியன் அல்வரேஸ், லியனல் மெஸ்ஸி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

# இந்தியாவின் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளராக கம்பீர்

இந்தியாவின் அடுத்த தலைமைப் பயிற்றுவிப்பாளர் கௌதம் கம்பீர் என்ற அறிவிப்பை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் எக்ஸ் வழியாக மேற்கொண்டார்.

இலங்கைக்கான சுற்றுப்பயணமே கம்பீரின் முதலாவது சுற்றுப்பயணமாக அமையவுள்ளது.

இந்நிலையில், அபிஷேக் நாயர் உதவி பயிற்றுவிப்பாளராகவும் வினய் குமார் அல்லது லக்ஷ்மிபதி பாலாஜியை பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக கம்பீர் வேண்டுவதாகவும், களத்தடுப்புப் பயிற்றுவிப்பாளராக டிலிப் தொடருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.



## தடகளப் போட்டிகளில்
# தேத்தாப்பளை பாடசாலை மாணவர் பிரகாசிப்பு

எம்.யூ.எம்.சனூன்

வென்னப்புவ நகரில் அண்மையில் (03,04) நடைபெற்ற பாடசாலை மாணவருக்கான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் தேத்தாப்பளை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய மாணவர் பல்வேறு போட்டிகளில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பாடசாலை அதிபர் அருட் சகோதரி மேரி டெல்சியா அவர்களின் வழிகாட்டலில் விளையாட்டு பொறுப்பாசிரியர் பாயிஸின் சிறந்த பயிற்றுவித்தலில் மாணவர்கள் இந்த அடைவைப் பெற்றுள்ளனர்.

போட்டிகளில் பிரகாசித்த மாணவர்:
என்.ஏ.பிரதீஷ் - 13 வயதின் கீழ் உயரம் பாய்தல் மூன்றாமிடம்.
ஏ.ஆர்.எம்.பிரமோதி - 15 வயதின் கீழ் பரிதி வட்டம் வீசுதல் இரண்டாமிடம், குண்டு போடுதல் - மூன்றாமிடம்
ஏ. லிஹாரா - 13 வயதின் கீழ் உயரம் பாய்தல் - மூன்றாமிடம்
டபிள்யூ.டி.எஸ்.தனிஷா - 15 வயதின் கீழ் உயரம் பாய்தல் இரண்டாமிடம்
எஸ்.ஜே.செனூரி தேவ்மினி - 18 வயதின் கீழ் ஈட்டி எறிதல் மூன்றாமிடம்
டி.எஸ்.தருஷா லக்ஷிதன் - 11 வயதின் கீழ் உயரம் பாய்தல் மூன்றாமிடம்
சீ.கே.எம்.சதுர்த்தனா - 15 வயதின் கீழ் உயரம் பாய்தல் - மூன்றாமிடம்
எல்.லுக்னி சுஜீவனி - 13 வயதின் கீழ் நீளம் பாய்தல் மூன்றாமிடம்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 11 ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.